# சங்கரன்கோவில் நகராட்சி

**2021-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26.02.2021ம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கு சாதாரணக்கூட்டம்**

பொருள் எண் : **1139**

சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1140

சங்கரன்கோவில் நகராட்சியில் வருவாய் மற்றும் மூலதனநிதி குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி ஆகியவற்றிற்கு 2020–2021ம் நிதி ஆண்டிற்கு திருத்திய வரவு செலவு அறிக்கை மற்றும் 2021–2022ம் நிதி ஆண்டிற்கு திருத்திய வரவு செலவு அறிக்கை மற்றும் 2021–2022ம் நிதி ஆண்டிற்கு உத்தேச வரவு செலவு அறிக்கையு மன்ற அங்கீகாரத்திற்காக,

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1141

சங்கரன்கோவில் நகராட்சிக்கு சொந்தமான கீழ் கண்ட அட்டவனையில் குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு 01.04.2021 முதல் 31.03.2024 (2021-2022, 2022-2023, 2023-2024) காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமைக்கு 03.02.2021 புதன் கிழமை அன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில், வரப்பெற்றுள்ள ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1. குத்தகை இனம்:
   தினசரி நாளங்கடியில் சுங்கம் வசூலிக்கும் உரிமம்

| வ. எண். | ஏலதாரர் மற்றும் ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு.S..மாடசாமி<br>த/பெ.சங்கலி செட்டியார் | ஏலக்கேள்வி இல்லை | | |
| 2. | திரு.V.முத்துக்குமார்,<br>த/பெ.வெள்ளையப்பன் | ஏலக்கேள்வி இல்லை | | |
| 3. | திரு.ப.சம்சுதீன்<br>த/பெ.உமர் கத்தா | ஏலக்கேள்வி இல்லை | | |
| 4. | திரு.செ. கருப்பசாமி,<br>த/பெ.செல்லையா | ஏலக்கேள்வி இல்லை | | |
| 5. | திரு.ரா.சமுத்திரபாண்டி,<br>த/பெ.ச.ராமசாமி | ரூ.16,80,000/- | | |
| 6. | திரு.குருசாமி,<br>த/பெ.திருமலை சேர்வை | ஏலக்கேள்வி இல்லை | | |
| 7. | திரு.ச.மாரியப்பன்,<br>த/பெ.சண்முகவேல் | | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 8. | திரு.முத்துப்பாண்டி,<br>113, வடக்கு தெரு | | ரூ.7,00,000/- | |
| 9. | திரு.பெ.முருகன்,<br>த/பெ.பெரியசாமி | | ரூ.18,18,000/- | உயர்ந்த கேள்வி |
| 10. | திருமதி.ச.ஆவுடையம்மாள்,<br>க/பெ.சந்திரசேகரன் | | ரூ.6,50,000/- | |
| 11. | திரு.தவசிக்கண்ணு,<br>238/3, முல்லை நகர், | | ரூ.7,00,000/- | |

ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.முருகன், த/பெ.பெரியசாமி, என்பவர் ரூ.18,18,000/-க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

2. குத்தகை இனம்:
நகராட்சி எல்லை முழுவதிலும் தெருக்களிலும் தெரு ஓரங்களிலும் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

| வ. எண். | ஏலதாரர் மற்றும் ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு.சு.காளிச்சாமி, த/பெ.சுப்பையா, | ஏலக்கேள்வி இல்லை | | |
| 2. | திரு.அ.திருமலைச்சாமி, த/பெ.அழகுமுத்து | ரூ.29,00,000/- | | உயர்ந்த கேள்வி |
| 3. | திரு.மு.குமார், த/பெ.முருகன் | ரூ.28,50,000/- | | |
| 4. | திரு.மா.மாடசாமி, த/பெ.மாரியப்பன் | ஏலக்கேள்வி இல்லை | | |
| 5. | திரு.பட்டரைச்சாமி, த/பெ.சுப்பையாக்கோனார் | | ரூ.20,00,000/- | |
| 6. | திரு.சண்முகச்சாமி, த/பெ.குருசாமி. | | ரூ.10,00,000/- | |
| 7. | திரு.பெ.முருகன், த/பெ.பெரியகாசி | | ரூ.17,00,000/- | |
| 8. | திரு.மா.மாடசாமி, த/பெ.மாரியப்பன் | | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |

ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.அ.திருமலைச்சாமி த/பெ.அழகுமுத்து என்பவர் ரூ.29,00,000/-க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக கேட்டுள்ளார்.

3. குத்தகை இனம்:
திருக்கோவிலுக்கு வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் சுவாமி சன்னதி தெருவில் (திருக்கோவிலுக்கு வரும் வாகனங்களுக்கு மட்டும்)

| வ. எண். | ஏலதாரர் மற்றும் ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு.மு.குமார், த/பெ.முருகன் | ஏலக்கேள்வி இல்லை | | |
| 2. | திரு.பெரியசாமி, த/பெ.வேல்சாமி | ஏலக்கேள்வி | | |
| 3. | திரு.கண்ணன், த/பெ.தர்மர் | ஏலக்கேள்வி | | |
| 4. | திரு.ஆர்.ஏ.டைட்டஸ் ஆதித்தன் த/பெ.அந்தோணிமுத்து நாடார், | ஏலக்கேள்வி | | |
| 5. | திரு.சரவணக்குமார், த/பெ.மாரிச்சாமி. | ஏலக்கேள்வி | | |
| 6. | திரு.முத்துக்குமார், த/பெ.வெள்ளையப்பன் | ஏலக்கேள்வி | | |
| 7. | திரு.மா.மாடசாமி, த/பெ.மாரியப்பன் | ஏலக்கேள்வி | | |
| 8. | திரு.பட்டரைச்சாமி, த/பெ.சுப்பையாக்கோனார் | | ரூ.10,55,555/- | |
| 9. | திரு.வே.இளங்கோ, த/பெ.வேல்சாமி | | ரூ.5,00,000/- | |
| 10. | திரு.ஆறுமுகச்சாமி, த/பெ.ஆவுரைக்கண்ணு | | ரூ.9,00,101/- | |
| 11. | திரு.பெ.முருகன், த/பெ.பெரியகாசி | | ரூ.12,07,000/- | |
| 12. | திரு.மா.மாடசாமி, | | ரூ.16,00,001/- | உயர்ந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | த/பெ.மாரியப்பன் | | | கேள்வி |

ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.மா.மாடசாமி த/பெ.மாரியப்பன் என்பவர் ரூ.16,00,001/க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

**குத்தகை இனம்:**

**நகராட்சியின் புதிய ஆடடிக்கும் தொட்டியில் அறுக்கப்படும் ஆடுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் ஆடடிக்கும் தொட்டியில் சேரும் சாணம், உதப்பி போன்ற கழிவுப் பொருட்களையும் அன்றாடம் சேகரித்து எடுத்துக்கொள்ளும் உரிமம்**

| வ. எண். | ஏலதாரர் மற்றும் ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு.ஆர்.ஏ.டைட்டஸ் ஆதித்தன் த/பெ.அந்தோணிமுத்து நாடார், | ஏலக்கேள்வி இல்லை | | |
| 2. | திரு.ப.சம்சுதீன் த/பெ.உமர் கத்தா | ஏலக்கேள்வி இல்லை | | |
| 3. | திரு.கு.முத்துராசு த/பெ.குருசாமி, | | **ரூ.51,900/-** | |
| 4. | **திரு.சீனிராஜ் த/பெ.மாடசாமி கோனார்.** | | **ரூ.64,200/-** | **உயர்ந்த கேள்வி** |

ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.சீனிராஜ், த/பெ.மாடசாமிக்கோனார் என்பவர் ரூ.64,200/க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

**4. குத்தகை இனம்:**
**பேரறிஞர் அண்ணா நகர பேருந்து நிலையத்தின் வடபுறம் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் உரிமம்**

| வ. எண். | ஏலதாரர் மற்றும் ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு.ப.சம்சுதீன் த/பெ.உமர் கத்தா | ரூ.5,90,500/- | | |
| 2. | திரு.மு.சிவா, த/பெ.முத்தையா | ரூ.5,91,000/- | | |
| 3. | திருமதி.கலாவதி க/பெ.மருதையாப்பாண்டியன் | ரூ.5,92,000/- | | உயர்ந்த கேள்வி |
| 4. | திரு.சமுத்திரப்பாண்டி த/பெ.ராமசாமி | ரூ.5,90,700/- | | |
| 5. | திரு.பட்டரைச்சாமி, த/பெ.சுப்பையாக்கோனார். | | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |

ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திருமதி.கலாவதி, க/பெ.மருதையாப்பாண்டியன் என்பவர் ரூ.5,92,000/க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக கேட்டுள்ளார்.

**5. குத்தகை இனம்:**
**பேரறிஞர் அண்ணா நகர பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம்**

| வ. எண். | ஏலதாரர் மற்றும் ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | **திரு.ரா.மகாராஜன், த/பெ.ராமையா** | **ரூ.2,20,500/-** | | **உயர்ந்த கேள்வி** |
| 2. | திரு.ஆர்.ஏ.டைட்டஸ் ஆதித்தன் த/பெ.அந்தோணிமுத்து நாடார் | ரூ2,20,300/- | | |
| 3. | திரு.கலைச்செல்வன், த/பெ.வெள்ளத்துரை | ரூ.2,20,100/- | | |

ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.மகாராஜன், த/பெ.ராமையா என்பவர் ரூ.2,20,500/க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக கேட்டுள்ளார்.

## 7. குத்தகை இனம்:

### பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (அனுமதிக்கப்பட்ட கட்டணம் மட்டும்)

| வ. எண். | ஏலதாரர் மற்றும் ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திரு.மாடசாமி, த/பெ.சங்கலிசெட்டியா | ரூ.3,39,000/- | | |
| 2. | திரு.ஆ.சங்கர நாராயணன் த/பெ.ஆறுமுகம் | ரூ.3,38,000/- | | |
| 3. | திரு.பெ.முருகன் த/பெ.பெரியகாசி | | ரூ.3,51,000/- | உயர்ந்த கேள்வி |
| 4. | திரு.க.சந்திரசேகரன் த/பெ.கணபதி | | ரூ.1,50,000/- | |
| 5. | திரு.கருப்பசாமி, 40, சங்கர் நகர் 3ம் தெரு, சங்கரன்கோவில். | | ரூ.1,75,000/- | |

ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.பெ.முருகன், த/பெ. பெரியகாசி என்பவர் ரூ.3,51,000/க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

## 8. குத்தகை இனம்:

### பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் / குளியலறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (ஒப்பந்தப்புள்ளி மட்டும்) சுய உதவிக்குழுக்குள் / தொண்டு நிறுவனங்கள் மட்டும்)

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | கோமாதா ஆர்வலர் சுயஉதவிக்குழு, வடக்கு ஆலங்குளம் | ரூ.6,21,000/- | |
| 2. | கோகுலக்கண்ணன் மகளிர் சுய உதவிக்குழு, செந்தட்டி | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 3. | பிஸ்மி மகளிர் சுயஉதவிக்குழு, காயிதேமில்லத் 6ம் தெரு, சங்கரன்கோவில். | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 4. | தென்றல் மகளிர் சுயஉதவிக்குழு, வாழ்ந்து காட்டுவோம் திட்டம், ஆட்கொண்டார்குளம் | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 5. | கோகுலம் பெண்கள் சுய உதவிக்குழு, ஆட்கொண்டார்குளம் | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 6. | மலர் மகளிர் சுயஉதவிக்குழு, ஆட்கொண்டார்குளம் | ரூ.7,00,000/- | |
| 7. | மருது மகளிர் சுயஉதவிக்குழு, இருமன்குளம் | ரூ.11,58,500/- | |
| 8. | தாமரை மகளிர் சுயஉதவிக்குழு, இரயில்வே பீடர் ரோடு. சங்கரன்கோவில் | ரூ.12.,20,501/- | உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி |

ஒப்பந்தப்புள்ளியில் தாமரை மகளிர் சுய உதவிக்குழு, இரயில்வே பீடர் ரோடு, சங்கரன்கோவில் என்ற நிறுவனம் ரூ.12,20,501/க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

**அலுவலகக்குறிப்பு:**

1) மூன்றாண்டு சராசரியை விடவும் கடந்த ஏலத்தொயை விடவும் அதிகமாக உள்ளதாலும் வரிசை எண். 1 முதல் 8 இனங்களுக்கான உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3240/2020/பி2)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1142

சங்கரன்கோவில் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் முதிர்வு கொசுக்களை, கொசுபுழுக்களை அழிக்க மற்றும் கழிவு ஓடைகளில் உற்பத்தியாகும் கொசுப்புழு அழிப்பதற்கு பயன்படுத்தப்படும் மருந்துகள் கீழ்க்கண்ட விபரப்படி தேவைப்படுகிறது.

1. Technical Malathion - 5% W/W 200 லிட்டர்
2. Temcphos – 50% EC – 500 லிட்டர்
3. Pyrethirum - 2% Extract 300 லிட்டர்

மேற்கண்ட மருந்துகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து வாங்க அனுமதியும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1143

2020-2021ம் ஆண்டு சிறப்புச்சாலை திட்டத்தின் கீழ் தார்ச்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை விளம்பரம் செய்த வகைக்கு பில் தொகை ரூ.136282/-க்கு சென்னை ப்ளேம் அட்வர்டைசிங் கம்பெனி (பி) லிமிடெட், சென்னை, நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பரம் செய்த வகைக்கு ப்ளேம் அட்வர்டைசிங் கம்பெனி (பி) லிமிடெட் பொது நிதியின் கீழ் வழங்குவதற்க்கு மன்ற அனுமதிக்காக. (ந.க.எண்: 3156/2020/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1144

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட சுவாமி சன்னதி காந்தி மண்டபம் அருகிலுள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமத்திற்கு சுய உதவிக்குழுக்கள் / தொண்டு நிறுவனங்கள் மூலம் 01.04.2021 முதல் 31.03.2024 வரை உள்ள காலத்திற்கு 03.02.2021 மற்றும் 26.02.2021 ஆகிய நாட்களில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் வரப்பெற்றவுள்ள ஒப்புந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

**<u>03.02.2021 ல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள்</u>**

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | கோகுலம் பெண்கள் சுய உதவிக்குழு, ஆட்கொண்டார்குளம் | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 2. | அன்னை தெரஸா மகளிர் சுய உதவிக்குழு | ரூ .4,96000/- | |
| 3. | கோகுலம் கண்ணன் சுய உதவிக்குழு, | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 4. | தாமரை மகளிர் சுயஉதவிக்குழு, பாரதியார் நகர் . சங்கரன்கோவில் | ரூ .5,06,666/- | உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி |
| 5. | பிஸ்மி மகளிர் சுயஉதவிக்குழு, காயிதே மில்லத் 6ம் தெரு | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 6. | கோமாதா ஆர்வலர்குழு, வடக்கு ஆலங்குளம் . | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 7. | முல்லை மகளிர் சுயஉதவிக்குழு, இரயில்வே பீடர் ரோடு. சங்கரன்கோவில | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 8. | தாமரை மகளிர் சுயஉதவிக்குழு, இரயில்வே பீடர் ரோடு. சங்கரன்கோவில் | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |

26.02.2021 ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வரப்பெறவில்லை

அலுவலகக்குறிப்பு:

மேலும் நகராட்சியின் நிதியினை கருத்தில் கொண்டு 26.02.2021 மறு ஒப்பந்தப்புள்ளி கள் கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்க யாரும் முன் வரவில்லை மேலும் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு சட்ட மன்ற தேர்தல் அறிவிப்பு வெளி வரக்கூடிய சூழ்நிலை இருப்பதாலும், நிர்வாகம் மூலம் வசூல் செய்வதற்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் 03.02.2021 வரப்பெற்றுள்ள உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியான தாமரை மகளிர் சுய உதவிக்குழு பாரதி நிறுவனம் ரூ.5,06,666/- வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.3240/2020/பி2)
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1145

அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோவில் தை மாதாந்த தெப்பதிருவிழாவிற்கு 11.02.2021 முதல் 13.02.2021 வரை உள்ள காலத்திற்கு சுவாமி சன்னதி மற்றும் ஏனைய தெருக்களில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு 10.2.2021 ல் நடைபெற்ற ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் மூன்று நபர்கள் கலந்து கொண்டு யாரும் ஏலம் கேட்க முன்வரவில்லை மேற்படி குத்தகையினை மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு கால அவகாசம் இல்லாததால் துறை மூலம் வசூல் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1146

சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் வழக்கு எண் WP(MD) 1911/2021 ன் படி வழக்கில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி, நகராட்சி ஆணையாளர், பொறியாளர், மேலாளர் ஆகியோரை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ள வழக்கில் மேற்படி உயர்நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்படி வழக்கினை தொடந்து நடத்துவதற்கு ஏதுவாக வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1147

இந்நகராட்சிப்பகுதியில் தெருஒரேங்களில் சுங்கம் வசூலிப்பவர்களின் கூடுதல் கட்டணமாக வியாபாரிகளிடம் வசூலிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து திரு.செல்வகணேசன் த/பெ.வெள்ளத்துறை என்பவர் சென்னை உயர் மன்றம் மதுரைக்கிளையில் WP(MD) No18799/2020 ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களை 2 வது பிரதிவாதியாகவும் ,நகராட்சி ஆணையாளர் அவர்களை 3 வது பிரதிவாதியாகவும் சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார் மேற்படி வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.7500/–வழங்க திரு.மகேந்திரன் வழக்கறிஞர் கேட்டுள்ளார். சூமற்படி வழக்கினை தொடந்து நடத்துவதற்கும், வழக்கறிஞர்கட்டணம் ரூ.7500/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1148

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடிதம் ROC No.19775/J2/2019–3 நாள் 15.12.2020 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.252 நாள் 16.07.2018 மற்றும் அரசிதழ் எண்.38 நாள் 31.01.2019–ன் படி நகராட்சிக்குட்பட்ட இடங்களில் முடித்திருத்தகம் / அழகுநிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் சம்மந்தப்பட்ட நகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்று, இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (ஐந்தாவது திருத்தம்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 40/2018) திருத்தம் செய்யப்பட்ட அட்டவணை V-ல் உள்ள உட்பிரிவு (jj) மற்றும் (jjj)–ல் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) பிரிவு 249–ன் படி தவறாமல் உரிமம் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது, தவறும் பட்சத்தில், தங்களது தொழில் உரிமம் இன்றி செயல்படுவதாக கருதி நிலையம் நடத்துவோரும், நிலைய உரிமையாளரும் பொறுப்பானவராக கருதி நிலையத்தை மூடி முத்திரையிடுதல், உள்ளிட்ட அனைத்து சட்ட பூர்வ நடவடிக்கைகளையும் மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் V/1920-ன் கீழ் மேற்கொள்ளப்படும் என அறிவித்து அதற்கான உரிம கட்டணம் நிர்ணயம்

செய்து நகர்மன்றத்தின் தீர்மான எண்–1070 நாள்.31.12.2020–ன் படி அனுமதிக்கப்பட்டு 15 நாட்களுக்குள் பொதுமக்களின் கருத்துக்கள் பெற தமிழ் தினமலர் நாளிதழில் 25.12.2020 மற்றும் ஆங்கில நாளிதழ் நாள் 08.01.2021 தேதிய பிரசுரம் செய்யப்பட்டது. இதுவரை பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் பெறப்படவில்லை என்பதால் இந்நகராட்சி பகுதியில் உள்ள முடித்திருத்தகம் / அழகுநிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் ஆகிய நிலையங்களுக்கு தொழில் உரிமம் பெற கட்டணம் இறுதி செய்து அதனை இந்நகராட்சி துணை விதி உரிம கட்டணம் அரசிதழ் எண்,1 நாள் 20.03.2020 திருத்தம் செய்து அரசிதழில் வெளியிட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதித்து மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1149

சங்கரன்கோவில் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு 5 எண்ணம் மின் ஆட்டோ 13 எண்ணம் BOV (Vehicle) பயன்படுத்தப்பட்டு வருகிறது. 25.02.2021ல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கூட்டத்தில் அறிவுறுத்தியபடி பொது சுகாதார வாகனங்களுக்கு இரண்டு மினி ஆட்டோக்களில் GPS கருவி பொருத்தி பரிசோதனை செய்வதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1150

சங்கரன்கோவில் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள தேவையான பொருள்கள் மற்றும் கிருமி நாசினிகள் வாங்க துப்புரவு ஆய்வாளர் தனது 25.02.20201ல் அறிக்கை செய்துள்ளார். எனவே மேற்கண்ட பொருள்கள் வாங்குவதற்கும் அதற்காகும் செலவினம் மேற்கொள்ள ரூ.6.00 லட்சத்திற்கு அனுமதி வேண்டி மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் – 1151

சங்கரன்கோவில் நகராட்சி கதவு எண் 139/2/1 பாலாஜி நகர் ,தெற்கு சங்கரன்கோவில் முகவரியில் வசித்துவரும் திரு.S.ஆறுமுகம் த/பெ.ய.எ.சண்முகவேல் எனபவர் இரயில்வேபீடர் ரோடு பகுதியில் அமைந்துள்ள சர்வே எண் 155/3P,4P நகரளவு எண் 62ல் அமைந்துள்ள இடம் சம்மந்தமாக நகராட்சி ஆணையாளர் அவர்களை 4ம் பிரதிவாதியாக சேர்ந்து சென்னை உயர் நிதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார்.மேற்படி வழக்கறிஞர் திரு.பி.மகேந்திரன் பி.ஏ.பி.எல் வழக்கறிஞர் அவர்களை நகராட்சி சார்பாக வழக்கு நடத்துவதற்கும் வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு தொகை ரூ.7500/– (ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதிக்காக.

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

தனி அதிகாரி மற்றும்
ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி.

நாள் – **26.02.2021.**